REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'

புதிய சந்தா விகிதம்

★

மூன்று மாதம்	...	...	ரூ. 6
ஆறு மாதம்	...	...	ரூ. 12
ஒரு வருடம்	...	...	ரூ. 24

தனி இதழ் 7 காசுகள்
இலங்கையில் 10 சதம்

மலர் 4] சென்னை: சித்திரை 12௳ புதன் (24—4—57) ★ ★ வெளியூர்: சித்திரை 13௳ வியாழன் (25—4—57) இதழ் [271

கதர்--கிராமக் கைத்தொழில் வளர்ப்பின் பயனற்றத் தன்மை

மனித உழைப்பு---ஆற்றல்---பணம் பாழ்படுத்தப்படுவதற்கு ஒரு எடுத்துக்காட்டு!

8 இலட்சம் தொழிலாளர்களின் ஓராண்டு உழைப்பில் கிடைத்த நன்மை என்ன?

கதர்தொழிலில் பணிபுரிந்த ஒருநபர் ஈட்டிய ஆண்டு வருமானம் ரூ. 60?

விஞ்ஞானத்திற்கு முரணான பொருளாதார நடைமுறைகளைக் கைவிடும் நேரம் வந்துவிட்டது

கதர்—கிராமக் கைத்தொழில் வளர்ப்பு என்ற பெயரால் காங்கிரசு ஆளவந்தார்கள், மக்கள் உழைப்பு—ஆற்றல்—பணம் முதலியவற்றை எந்த அளவு பாழ்படுத்தி வருகிறார்கள் என்பதை, வி. எஸ். நடராசன் என்பவர் சுட்டிக்காட்டி கண்டித்துள்ளார்.

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' இதழில் அவர், இதுபற்றி கடிதம் ஒன்று தீட்டியுள்ளார்; அது, இங்கு தரப்பட்டிருக்கின்றது:—

"1953—54ம் ஆண்டில் தம்அரவணைப்பில் நான்கு இலட்சம் நபர்களே வேலை செய்திருக்க, அதற்கு அடுத்த ஆண்டில் 12 இலட்சம் நபர்கள் வேலை செய்துள்ளனர் என்று கதர்—கிராம கைத்தொழில் குழுவின் தலைவர், வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

"மேலே குறிப்பிட்டுள்ளதில் 7·96 (ஏறத்தாழ 8 இலட்சம்) நபர்கள், நூற்பவர், நெசவாளர், மற்றும் அத்துறையில் ஈடுபட்டிருப்போர் என்ற நிலையில் கதர் தொழிலில் பணியாற்ற இடம் பெற்றுள்ளனர். அவர்கள் மொத்தத்தில் 24·87 மில்லியன் சதுர கெசத் துணி உற்பத்திச் செய்துள்ளனர்.

"அத்துணியின், விற்ற மொத்த விலைமதிப்பு 4·77 கோடி ரூபாய் (அல்லது 480 இலட்சம்). ஒவ்வொரு நபரும் ஈட்டிய ஆண்டு வருமானம் ரூ. 60 ஆகும் என்று மேற்படி விவரம் உணர்த்துகிறது. அவர்கள் பயன்படுத்திய பஞ்சின் மதிப்பு, கதர்—கிராம கைத்தொழில் குழு—விற்பனை சங்கங்கள் முதலியவற்றிற்காகும் செலவு ஆகிய எதுவும் கழிக்கப்படவில்லை.

"மனித உழைப்பு ஆற்றல்—பணம் ஆகிய மூன்றும் பெருத்த அளவில் பாழ்படுத்தப்படுவதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும். எட்டு இலட்சம் தொழிலாளர்கள், ஒரு முழு ஆண்டு உழைப்பில் குறிப்பிடத்தக்க மிகுதியான செல்வத்தை நாட்டிற்கு அளிக்க முடியும்.

"எட்டு இலட்சம் ஏக்கர் காடுகளை அழித்து மதிப்புயர்ந்த இரப்பர் செடிகளைப் பயிர் செய்வது அவர்களால் இயலும் என்பதை எடுத்துக் காட்டாகக் குறிப்பிடலாம். அதன் விளைவாக நாட்டின் இரப்பர் உற்பத்தி மும்மடங்காக உயரும்.

"300 அல்லது 400 கல் தொலைவுக்கு அவர்களால் பாசனத்திற்குப் பயன்படக்கூடிய கால்வாயை வெட்டுவது சாத்தியமாகும்.

"தேசத்தின் பொருளாதாரம் தீவிரமாக வளம்பெற வேண்டும் எனக் கருதிக் கொண்டிருக்கின்ற நாம், விஞ்ஞான ரீதியில் திட்டம் தீட்டுவதற்கு முரணாக இருக்கக்கூடிய பொருளாதார நடைமுறைகளைக் கைவிட்டு வருவதற்கான நேரம் வந்துவிட்டது."

ரூ. 1,60,000

சேலம் அரசாங்க பாங்கியிலிருந்து காணப்படவில்லையாம்

'ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா'வின் சேலம் கிளையின் காரியாலயத்திலிருந்து ரூ. 1,60,000 காணாமற் போய்விட்டதாம்.

இதுபற்றி இன்று பிற்பகலில் போலீஸ் அதிகாரிகளுக்கு புகார் செய்யப்பட்டது.

சேலம் மாவட்டம் போலீஸ் சூப்பிரண்டெண்டு கே. விசுவநாதன் நாயர் அடிஷனல் போலீஸ் சூப்பிரண்டெண்டு யு. நாகேசா, சேலம் உதவி போலீஸ் சூப்பிரண்டெண்டு எ. இராமநாதன் ஆகியவர்கள் உடனே போலீஸ் படையுடன் விரைந்து பாங்கிற்குச் சென்றனர்.

எப்படி இந்தத் தொகை காணாமல் போயிற்று என்று தெரியவில்லை.

போலீசார் தீவிரமாக புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

இதுபற்றி நகரில் ஒரே பரபரப்பாக உள்ளது. (ந. நி.)

அல்லாமா மஷ்ருகி கைதாகி விடுதலை

'விடுதலைப் போர்' நடத்துவதாக 'முகாம்' போட்டிருந்தாராம்!

லாகூர், ஏப். 23—

காக்சார் கட்சியின் முன்னாள் தலைவரான அல்லாமா மஷ்ருகி, வாகா அருகில் உள்ள இந்தியா - பாகிஸ்தான் எல்லையில் அவருடைய 47 சீடர்களுடன் நேற்று போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்க அவர்கள் முடிவு செய்திருந்ததாகவும், கைது செய்யப்பட்டபோது அவர்களிடம் கட்டாரிகள், ரிவால்வர்கள் இருந்ததாகவும், ஒரு சப்-இன்ஸ்பெக்டர், ஒரு கான்ஸ்டபிள் ஆகியோரைப் பிடித்து வைத்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

அல்லாமா மஷ்ருகி மட்டும் பின்னர் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ஜாமீன் அளிக்க இயலாத மற்ற 47 பேர் ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

பெரியாருக்குத் தண்டனை

நீதிமன்றத்தை அவமதித்ததாக ரூ. 100 அபராதம்

சென்னை, ஏப். 23—

நீதிமன்றத்தை அவமதித்ததாக பெரியார் ஈ. வெ. ரா. மீதும், திருமதி மணியம்மை மீதும் தொடரப்பட்ட வழக்கில் சென்னை உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி திரு. இராசமன்னாரும், நீதிபதி திரு. எ. எஸ். பி. அய்யரும் தீர்ப்பளித்துள்ளனர்.

சென்னை உயர்நீதி மன்ற தீர்ப்பு ஒன்றைக் குறைகூறி பெரியார் அவர்கள் பேசியதாகவும், அவரது பேச்சை ஆதரித்து மணியம்மை வெளியிட்டதாகவும் அவதூறு வழக்கு தொடரப்பட்டது.

நீதிபதியின் தீர்ப்பைக் குறைகூறியிருப்பதுடன், தீர்ப்பு வழங்கிய நீதிபதியை — தனிப்பட்ட சாதி அபிமானம் காரணமாக தீர்ப்பு வழங்கியதாக—பெரியார் அவர்கள் குறைகூறியுள்ளார் என்றும், இது நீதிமன்றத்தை அவதூறு செய்த குற்றத்திற்குள் அடங்கும் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

பெரியார் அவர்களது முதுமையைக் கருதி ரூ. 100 மட்டும் அபராதம் விதிப்பதாக நீதிபதிகள் குறிப்பிட்டனர்.

மணியம்மையார் மீண்டும் இம்மாரியான குற்றத்தைச் செய்தால் கடுமையாகத் தண்டிக்கப்படுவார் என்ற எச்சரிக்கையோடு விடுதலை செய்வதாக நீதிபதிகள் தெரிவித்தனர்.

மொழிவழி மாநிலம் அமைக்கப் புதிய முயற்சி

மகா குசராத் கோரிக்கை வலுப் பெறுகிறது

சௌராட்டிரம்---கட்ச்---குசராத் ஆகிய பகுதிகளைக் கொண்ட குழு அமைப்பு

ஆமதாபாத், ஏப். 23—

ஆமதாபாத், சௌராட்டிரம், கட்ச் ஆகிய மூன்று பகுதிகளைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் ஒன்றுகூடி, மேற்படி பகுதிகளை உள்ளடக்கிய தனி மகா குசராத் மாகாண அமைப்பை நிர்மாணிப்பதற்கான முயற்சியை மேற்கொள்ள குழு ஒன்றை நிறுவி உள்ளனர்.

மேற்படி மாநாடு, மகாகுசராத் ஜனதா பரிஷத்தால் கூட்டப்பட்டிருக்கிறது.

பொருளாதாரத் துறையிலும், கலாச்சாரத் துறையிலும் ஒருமைப்பாட்டுடன் விளங்கி வரும் தங்களுக்கும், குசராத் மக்களுக்கும் இடையில் பிளவை உண்டாக்க பன்மொழி மாநில அமைப்பு ஆதரவாளர்கள் முயன்று வருவதாகவும், அது விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும், தாங்கள் இதுவரை பல்வேறு கட்சியினரால் பலவந்தமாகப் பிரித்துவைக்கப்பட்டு வந்திருப்பதாகவும், அம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்று குறிப்பிட்டிருக்கிறது.

தனி மகா குசராத் மாநில ஆட்சியின்கீழ் சௌராஷ்டிரம், கட்ச் மக்களினுடைய நலன்கள் சிறந்த முறையில் பாதுகாக்கப்படும் என்றும் மற்றொரு தீர்மானம் அறிவிக்கிறது.

இப்பகுதிகளின் பிற்பட்ட தன்மையைப் பயன்படுத்திக் கொண்டு பம்பாய் நகரம் வளம் பெற்றிருப்பதாகவும், அப்பிற்பட்ட தன்மையை நீடிப்பதற்காகவே பன்மொழி மாநில அமைப்பு வற்புறுத்தப்பட்டு வருவதாகவும் மேற்படி தீர்மானத்தில் விளக்கப்பட்டிருக்கிறது.

முஸ்லிம் லீக் போராட்டம்?

சட்ட மறுப்பு இயக்கம் நடத்துவதற்கு திட்டம்

கராச்சி, ஏப். 23—

மேற்கு பாகிஸ்தானில் கூட்டுத் தொகுதி முறையை கொண்டு வருவதை எதிர்த்து 'சட்ட மறுப்பு இயக்கம்' நடத்த முஸ்லிம் லீக் திட்டமிட்டு வருகிறதாம்.

இந்த இயக்கத்தில் பங்கு கொள்ள 3,000 தொண்டர்கள் தற்போது தயாராக உள்ளனராம்.

இந்தத் தொண்டர் படையில் 50,000 பேர் சேர்ந்தவுடன் போராட்டம் ஆரம்பமாகும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இலங்கை சர்க்கார் புதியத் திட்டம்

மொழிப் பிரச்சினையைத் தீர்க்க பிரதேசக் குழுக்களாம்

கொழும்பு, ஏப், 23—

இலங்கையில் மொழிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பிரதேசக் குழுக்களை அமைக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம்.

இந்தப் பிரதேசக் குழுக்கள் அந்தந்தப் பகுதியில் வாழும் மக்களின் பெருவாரியான மொழியை நிர்வாக மொழியாகவும் முயற்சி செய்யுமாம்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 24—4—57 புதன்

டில்லிப் பேரரசின் தாராளமே தாராளம்!

உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டத்திற்கு சென்னைக்கு கிடைக்கும் உதவியின் இலட்சணம்!

தமிழ்நாடு விவசாயிகட்கு உர வசதி செய்துதருவதில் இந்தியப் பேரரசின் 'பெருந்தன்மை' பற்றி விவரம்

புதுடில்லி, ஏப். 23—

சென்னை மாநிலத்திற்கு 1957—58-ம் ஆண்டிற்கு உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டங்களுக்காக ரூ. 81,46,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் மத்திய சர்க்கார் கடனாகவும் மானியமாகவும் ரூ. 68,60,000 அளிக்கும்; மாநில சர்க்கார் ரூ. 9,64,000 அளிக்கும்; மீதி 8,22,000 புதிய சிறு பாசனத் திட்டங்களை மாநில சர்க்கார் சமர்ப்பிக்கும்போது, மத்திய சர்க்கார் அளிக்கும்.

இதுமட்டுமின்றி 1,05,000 டன் இரசாயன உரங்களை வாங்கி விவசாயிகளுக்கு வினியோகம் செய்வதற்காகச் சென்னை சர்க்காருக்குக் குறுகிய கால தவணை அடிப்படையில் ரூ, 3,30,75,000 கடன் தந்துதவ மத்திய சர்க்கார் சம்மதித்துள்ளதாம்.

இந்தத் திட்டங்களின் பலனாக 1,53,968 டன் உணவுப் பொருள் அதிகமாக உற்பத்தியாகுமென எதிர்பார்க்கப்படுகிறதாம்.

நடைமுறை ஆண்டில் உணவு உற்பத்தி அளவை எவ்விதமேனும் 3,20,235 டன் அதிகரிக்க வேண்டுமென்பது சென்னையின் குறிக்கோளாகும்; இதில், பெரிய நீர்ப்பாசனத் திட்டப் பகுதிகளில் மட்டும் 25,058 டன் விளையுமென எதிர்பார்க்கப்படுகிறதாம்.

மீன்கள் அபிவிருத்தி, மீன் விற்பனை வசதிகள் குறித்தும் 6 திட்டங்கள் உள்ளன; இதற்கு மத்திய சர்க்கார் ரூ. 1,30,000 உதவித் தொகையாகவும் 60,000 கடனாகவும் தருவார்களாம்.

80,000 மணங்கு உப்பை சலுகை விலையில் வினியோகிக்க மத்திய சர்க்கார் ரூ. 28,500 உதவித் தொகை அளிப்பார்களாம்!

உர அபிவிருத்திக்கான மூன்று திட்டங்களுக்கு உதவித் தொகையாக ரூ. 3,08,000-மும் ரூ. 12,20,000 கடனாகவும் மத்திய சர்க்கார் தருமாம்.

மூன்று சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் 600 குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு, ரூ. 16-இலட்சம் மத்திய சர்க்கார் கடனாகத் தருமாம்.

ஆற்றுத் தண்ணீர் இறைப்புத் திட்டத்திற்காக மத்திய சர்க்கார் உதவித் தொகையாக ரூ. 5,946-ம், ரூ. 65,000 கடனாகவும் தருமாம்.

சில விசேட சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் 811 பாசன வேலைகள் ரூ. 83,15,000 செலவில் நடைபெறும்; 1957-58-ம் ஆண்டில் இதற்காக ரூ. 26,80,000 இந்தியப் பேரரசு கடனாகத் தருமாம்.

குளங்களிலும் ஏரிகளிலும் 'தூர்' எடுத்துச் சீர்திருத்துவதற்காக ரூ. 2,71,000 கடனாகத்தர மத்திய அரசாங்கம் சம்மதித்திருக்கிறதாம்.

63,180 மணங்கு நெல் விதைகள், 12,150 மணங்குப் புஞ்சைத் தானியங்களின் விதைகள் வினியோகத்திற்காக ரூ. 75,300 உதவித் தொகையாக மத்திய ஆட்சியினர் தருவார்களாம்.

விளைச்சலை அரிக்கும் பூச்சிகளையும், கிருமிகளையும் அழிக்கும் மருந்துகளை விவசாயிகளுக்கு வினியோகிக்கும் திட்டத்திற்காக ரூ. 1,35,000 மானியமாக டில்லியிலிருந்து கிடைக்குமாம்.

உரப் பொடிகளையும், பூச்சிகளைக் கொல்லும் மருந்துகளையும் பயிர்களில் தூவுவதற்குரிய கருவிகளைப் பாதி விலையில் விவசாயிகளுக்கு வழங்குவதற்காக ரூ. 1,08,000 மானியமாக டில்லி தருமாம்.

சிமெண்ட் தொழிற்சாலை

[2]

தேவையான தொழிற்சாலைகளை, பெரும் முதலீடு செய்து துவங்குவதற்குரிய பணம் படைத்தவர்கள் தென்னகத்தில் கிடையாது என்பது வெளிப்படை உண்மை. இப்பொது நிலை ஆந்திரத்திற்கும் பொருந்தக்கூடியதே. இப்பெருண்மையை தென்னாட்டவர் தெரிந்திருப்பதுபோன்றே, இந்தியப் பேரரசும் தெளிவாகத் தெரிந்திருக்கின்றது.

தொழில்களில் முதலீடு செய்ய பணபலம் படைத்தவர்கள் தென்னகத்தில் இல்லை என்ற பெருண்மையைத் தெளிவாகத் தெரிந்திருக்கும் இந்தியப் பேரரசு, ஆந்திரத்தில் தனியார் துறையில் ஒன்றல்ல இரண்டல்ல—ஏழு தொழிற்சாலைகளைத் துவங்க அனுமதி அளித்திருக்கின்றது என்றால் என்ன பொருள் அதற்கு? எந்த எண்ணத்தில் அவ்வாறு தனியார் துறைக்கு அனுமதி அளிக்க இந்தியப் பேரரசு முன் வந்திருக்கின்றது? சிந்தித்துப் பொருள் கொள்ளத்தக்கது. நிற்க,

ஆந்திரத்தில் சிமெண்ட் தொழிற்சாலைகள் துவங்குவதற்கான வாய்ப்பும், வசதியும், தேவையும் வரைகடந்து இருக்கின்ற காரணத்தினால்தான், மேற்படி தொழிற்சாலைகளை ஆந்திரத்தில் துவங்குவதற்கான அனுமதியை இந்தியப் பேரரசு அளிக்க முன்வந்திருக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். ஆனால் மேற்படி தொழிற்சாலைகளுக்காகப் பெரும் முதலீடு செய்யக்கூடியவர்கள் ஆந்திரத்தில் கிடையாது எனத் தெரிந்திருந்தும் அத்தொழில் துறையைத் தனியார் துறைக்கு ஒதுக்கி இருப்பதில்தான் இந்தியப் பேரரசின் உள்ளெண்ணம் குறித்து நாம் ஐயுற வேண்டியவர்களாகின்றோம்.

சிமெண்ட் தொழிற்சாலைகள் ஆந்திரத்தில் துவங்கப்பட்டால் அவைகளுக்கு நல்ல எதிர்காலம் இருக்க முடியாது என்று இந்தியப் பேரரசு கருதி இருக்குமானால், நிச்சயமாக அதற்கான அனுமதியைக் கொடுக்க முன் வந்திருக்காது. அந்நிலையில் தனியார் துறையானாலும் பொதுத் துறையானாலும் எந்தத் துறையிலும் ஆந்திரத்தில் சிமெண்ட் தொழிற்சாலைகளைத் துவங்க இந்தியப் பேரரசு விரும்பியிருக்காது என்று நாம் முடிவு கட்டிக்கொள்வதுதான் நியாயமாகும்.

தனியார் துறையில்தான் சிமெண்ட் தொழிற்சாலை வளப்பட்டு முன்னேற்றமடைய முடியும், அதே முன்னேற்றத்தை அரசாங்கத் துறையின் மூலம் அடைவது சாத்தியமாகாது என எண்ணுவது பொருந்தாது. அது, தனது நிர்வாகத்தை தானே குறைத்தும் இழித்தும் பேசிக் கொள்ளுவதில் முடிவுறும்.

பல சிமெண்ட் தொழிற்சாலைகளைத் துவங்க தனியார் துறைக்கு அனுமதி அளிக்கத் துணிந்திருக்கின்ற இந்தியப் பேரரசு, தனது பொறுப்பில் ஒரு தொழிற்சாலையைத் துவங்க அனுமதி கோரினால் மறுக்கவா போகிறது என்ற நினைப்பில், அரசாங்க பொறுப்பில் ஒரு தொழிற்சாலையைத் துவங்க அனுமதி அளிக்கவேண்டும் என்று ஆந்திர ஆட்சி கோரி இருக்கின்றது. அதுவுமன்றி, தனியார் துறையில் ஏழு தொழிற்சாலைகள் இலாபகரமாக நடைபெற இடமிருக்கின்ற பொழுது, தனது பொறுப்பில் துவங்கப்படும் ஒரு தொழிற்சாலையைத் தம்மால் இலாபகரமாக நடத்த முடியாமலா போகும் என்ற நம்பிக்கையிலும், ஆந்திர ஆட்சி அனுமதி கோரி இருக்கிறது.

தன்னாலும் இலாபகரமாக சிமெண்ட் தொழிற்சாலையை நடத்திக்காட்ட முடியும் என்ற ஆந்திர ஆட்சி கொண்டுள்ள நம்பிக்கையும், தக்க ஆதாரத்தின்மீது கொள்ளப்பட்டதாகும். நாகார்சுனசாகர் நீர்த்தேக்கத் திட்டத்தைக் கட்டி முடிக்க வேண்டியிருக்கின்றது.

அதற்கு ஏராளமான சிமெண்ட் தேவைப்படுகிறது. மேற்படி அணைத் திட்டத்தின் அருகாமையிலேயே இருந்து வரும் வசதியைப் பயன்படுத்திக்கொண்டு, சிமெண்ட் தொழிற்சாலை ஒன்றை அரசாங்கப் பொறுப்பில் துவங்கினால், அணைத் திட்டத்தின் மூலம் உருவாகக்கூடிய வாய்ப்பின் விளைவாக, சிமெண்ட் தொழிற்சாலையை சிறந்த அடிப்படையின்மீது அமைத்துவருவதும் சாத்தியமாகும் என்பது, ஆந்திர ஆட்சியின் அசைக்க முடியாத நம்பிக்கை. எனவே, நாகார்சுனசாகர் திட்டத்தைக் காரணமாகக்காட்டி, அண்மையில் இயற்கை வசதியோடு அமைந்திருக்கின்ற விசயபுரி பகுதியில், தனது பொறுப்பில் சிமெண்ட் தொழிற்சாலை ஒன்றைத் துவங்க அனுமதி அளிக்க வேண்டும் என, இந்தியப் பேரரசை ஆந்திர ஆட்சி கோரியது.

ஆனால், இந்தியப் பேரரசோ, சிமெண்ட் தொழிற்சாலை ஒன்றைத் துவங்கி என்றோ அடைந்துள்ள பெரு நஷ்டத்தைக் காரணமாகக்காட்டி, ஆந்திர ஆட்சியின் கோரிக்கையை மறுத்துவிட்டது. இருந்தாலும், மீண்டும் அனுமதி கேட்டு இந்தியப் பேரரசை வற்புறுத்தப்போவதாக ஆந்திரஅமைச்சு அறிவித்திருக்கின்றது.

பெரும் முதலீடு செய்து சிமெண்ட் தொழிற்சாலைகளைத் துவங்க ஆந்திரத்தில் பணபலம் கொண்டவர்கள் கிடையாது. சிமெண்ட் தொழிற்சாலை ஒன்றைத் துவங்க ஆந்திர ஆட்சிக்கு அனுமதி அளிக்கவும் இந்தியப் பேரரசு மறுத்துவிட்டது. அதே நேரத்தில் சிமெண்ட் உற்பத்திக்குத் தேவையான இயற்கை வளம் ஆந்திரத்தில் இருப்பது கண்டு, தொழிற்சாலைகள் துவங்க தனியார் துறைக்கு இந்தியப் பேரரசு அனுமதியும் அளித்திருக்கின்றது.

இவைகளை அடிப்படையாகக் கொண்டு இந்தியப் பேரரசின் உள்ளக்கிடக்கையை ஆராய்ந்து பார்க்கவேண்டும். அவ்வாராய்ச்சியில் ஒரே ஒரு முடிவுதான் எவருக்கும் கிடைக்கக்கூடும்.

ஆந்திரத்தில் சிமெண்ட் தொழிற்சாலைகள் துவங்கப்படுவதின் மூலம், ஆந்திரம் குறிப்பிட்ட துறையில் தொழில்மயமாக ஆக்கப்படவேண்டும் என்பதை விரும்புகின்றவர்கள், முதலீடு செய்யும் ஆற்றல் பெற்றுள்ள பணபலம் படைத்தவர்களைத் தேடித் திரிந்துதான் ஆகவேண்டும். அந்தச் சூழ்நிலையில் வேறுவகை கிடைக்காத காரணத்தால், வடநாட்டு முதலாளிகளை வருந்தி அழைத்து, ஆந்திரத்தில் சிமெண்ட்தொழிற்சாலையைத் துவங்குங்கள் என்று வேண்டத்தான் வேண்டும். அந்த நேரத்தில், தங்களுக்குச் சாதகமான நிபந்தனைகளைவெகு இலகுவாகப் பெற்று,வடநாட்டு முதலாளிகள் ஆந்திரத்தில் சிமெண்ட் தொழிற்சாலையைத் துவங்குவதற்கு ஒப்பக்கூடும். சிமெண்ட் தொழிற்சாலை வேண்டும் என்ற ஆந்திரத்தின் பெருவிருப்பும் அப்பொழுது நிறைவேறக்கூடும்.

தனியார் துறைக்கு அனுமதி அளித்தும்கூட, அதேதொழிலை அரசாங்கத் துறையில் அனுமதி அளிக்க மறுக்கும் இந்தியப் பேரரசின் போக்கிற்கு, மேற்குறிப்பிட்டதைத் தவிர வேறு எதையும் நியாயமாகக் கூறுவதற்கில்லை. இதைத் தென்னாட்டவர் தெளிவாகத்தெரிந்து கொள்ளவேண்டும்.

ரூ. 50 லட்சம் செலவில்

பொறியியல் ஆராய்ச்சி நிலையம் வடக்கில் நிறுவப்படும்

கல்கத்தா, ஏப். 22—

கல்கத்தாவிலுள்ள கல்யாணி பகுதியில் மத்திய பொறியியல் ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்த இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம்.

இதற்கு ரூ. 50 இலட்சம் செலவிடப்படுமாம்.

தொழில் சம்பந்தமான பொறியியல் ஆராய்ச்சி நடத்த மேற்கு வங்க அரசாங்கத்துடன் கூட்டாக இங்கு திட்டமிடப்பட்டுள்ளதாம்.

இதற்கான நிபுணர்கள் மாநாடு முதலமைச்சர் ராய் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இந்த ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்த கல்யாணியில் 27 ஏக்கர் நிலத்தை மத்திய அரசாங்கத்திற்கு மேற்கு வங்கம் அளித்துள்ளதாம்.

கேட்டீரா, சேதி!

தேர்தல் முடிவுகளை வாக்குச் சாவடிகள் வாரியாகத் தனித் தனியே ஒலிபெருக்கி மூலம் மக்களுக்கு அவ்வப்போது அறிவித்தானது தேர்தல்விதிகளின் படி சரியல்ல வென்றும், இனி இதுபோன்ற முறைகளைத் தேர்தல் அதிகாரிகள் மேற்கொள்ளக் கூடாதென்றும் சர்க்கார் உத்தரவு ஒன்று தெரிவிக்கிறது.

இம்முறையினால் இரகசிய ஓட்டுமுறை பாதிக்கப்படுவதாகவும் கட்சிப் பிரதிவாதங்களுக்கு இடமளிப்பதாகவும் இவ்வுத்தரவில் கூறப்பட்டுள்ளது.

சென்னை சேரிகள் அபிவிருத்தியில் புதிய முயற்சி

உதவித் தொகையை இரு மடங்காக்கத் திட்டக் குழுவிடம் மனு

சென்னை, ஏப். 22—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் சென்னை நகர சேரிகள் அபிவிருத்திக்காக ரூ. 168 இலட்சம் ஒதுக்கப்பட்டது; ஆனால், திட்டத்தின் முதல் வருடத்தில் (1956) சில சிக்கல்கள் காரணமாக எவ்வித அபிவிருத்தி வேலையும் மேற்கொள்ளப்படவில்லை; இந்த ஆண்டில் ரூ. 20 இலட்சம் இந்த வேலைகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது; ஆனால், இப்பணம் போதுமானதாயில்லை; எனவே, ரூ. 40 இலட்சம் ஒதுக்கும்படி கோரி திட்டக் குழுவினருக்குக் கடிதம் எழுதுவதென கோட்டையில் நடைபெற்ற உயர்தர அதிகாரிகள் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் சென்னை நகர சேரிகள் அபிவிருத்திக்காக, ரூ. 380 இலட்சம் கேட்கப்பட்டது; ஆனால், ரூ. 168 இலட்சம்தான் ஒதுக்கப்பட்டது.

சென்னையில் மொத்தம் 311 சேரிகள் இருக்கின்றனவாம்! இவற்றில் 56,000 குடும்பங்கள் வசிக்கின்றனவாம்!

$2\frac{1}{2}$ இலட்சம் பேர் குடியிருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

56 சேரிகள் அரசாங்க நிலத்திலும், 49 சேரிகள் நகரசபைக்குச் சொந்தமான நிலத்திலும், 206 சேரிகள் தனிப்பட்டவர்கள் நிலத்திலும் இருக்கின்றனவாம்.

அரசாங்க வசமுள்ள 56 சேரிகளையும் உடனடியாக நகரசபைக்கு ஒப்படைத்துவிடுவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

அவசியம் ஏற்படும்போது சட்டபூர்வமாக நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு நிலத்தை வசப்படுத்திக்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நல்ல சாலைகள், வீட்டு வசதிகள், சாக்கடை வசதிகள் செய்வது பற்றியும் சில முடிவுகள் செய்யப்பட்டுள்ளதாம்.

ரூ. 10 இலட்சம் செலவில் இதற்கான திட்டங்களைத் தயாரித்து தருமாறு சம்பந்தப்பட்ட இலாகாக்களை கேட்டுக்கொண்டுள்ளனர்.

இன வேறுபாடுக்கு 'நர்சு'கள் எதிர்ப்பு!

ஜோகன்ஸ்பர்க், ஏப். 21—

வெள்ளையரல்லாத நர்சுகள், வெள்ளையரின் சிகிச்சைக்கு வரக்கூடாது என்று பிறப்பிக்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் இனவேற்றுமை உத்தரவை நர்சுகள் சங்கம் கண்டித்திருக்கிறது.

'நயா பைசா' நாணயமும் கிராம மக்கள் நிலைமையும்

கண்ணதாசன் விளக்கம்

22—4—57 மாலை 7 மணியளவில் சென்னை—இராயபுரம்—பனைமரத் தொட்டி அருகில், இராயபுரம் நிலமன்றத்தின் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் தோழர் ஆர். லிங்கராசு தலைமையில் நடைபெற்றது.

தலைவர் தனது முன்னுரையில் தி. மு. கழகம் சமூக—அரசியல்—பொருளாதாரத் துறையில் ஆற்றிய பணியையும், தேர்தலில் கழகம் பெற்ற வெற்றியையும் குறிப்பிட்டுப் பேசினர்.

தோழர் டேப் பி. ஜி. இராதாமாணிக்கம் இயக்கப் பாடல்கள் பாடினர்.

அடுத்து தோழர் ம. செல்வராசன் பேசுகையில், காங்கிரஸ் வெற்றி பெற்றுவிட்டது என்று காங்கிரசுக் கட்சியினர் எதிர்க் கட்சித் தலைவர்களை தனிப்பட்ட முறையில் தாக்குவதைக் கண்டித்தும், அது சனநாயக முறையல்லவென்றும் தெளிவாக்கினர்.

பின்னர் தோழர் வே. திருநாவுக்கரசு பேசுகையில், காங்கிரஸ் இத்தேர்தலில் ஜனநாயகத்தை வைத்து வெற்றிபெறவில்லை என்பதையும், பணம்—அதிகாரம்—ஆணவம்—மிரட்டல் இவைகளால்தான் வெற்றிபெற முடிந்தது என்பதையும் விளக்கியதுடன், நாட்டில் உள்ள அத்தனைக் கட்சிகளும் தி. மு. கழகத்தை எதிர்த்தும்கூட அதற்கு 16½ இலட்சம் மக்கள் வாக்களித்தது, தி. மு. கழகத்தின் தனிப்பெரும் வெற்றியென்றும், திராவிட நாடு பிரிவதை மறுக்கிறவர்கள் ஆதாரபூர்வமான காரணங்காட்டிமறுக்க முடியவில்லை யென்றும், திராவிடம் பெறுவது நமது தேசிய உணர்வு என்றும் குறிப்பிட்டார்.

அடுத்துப்பேசிய தோழர் என். சிவரத்தினம் அவர்கள் தொகுதி நிலையையும், மாற்றார் நம்மைத் தனிப்பட்ட முறையில் தாக்குவதைக் கண்டித்தும், மீனவர் சமுதாயத்திற்குப் பாடுபட இதுவரை யாரும் முன்வராத நிலையைக் குறிப்பிட்டும் சிறிதுநேரம் பேசினர்.

பிறகு தோழர் எஸ். எஸ். தென்னரசு அவர்கள் கழகம் பிரிந்ததிலிருந்து நம்மை ஒழித்துக்கட்ட மாற்றார்கள் முயற்சித்து வந்ததையும், அதன் விளைவால் நமக்கு வளர்ச்சியை அதிகமாகத் தருகிறதென்றும் விளக்கியதுடன், தமிழ் நாட்டிற்கு அண்ணா அவர்கள் ஆற்றிய பணியை விளக்கிப் பேசினர்.

இறுதியில் பேசிய தோழர் கண்ணதாசன் அவர்கள் தேர்தலில் காங்கிரஸ் கட்சியினர் நடந்துகொண்ட முறையையும், தகாத முறைகளில் வாக்குகளைப் பெற்றதையும் விளக்கி, ஒழுங்கான தேர்தல் நடந்தால் பாதிபேர் காங்கிரஸ் சார்பில் வெற்றி பெற்றிருக்க முடியாது என்றும் விளக்கிப் பேசினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின், மன்றச் செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

கூட்டத்தில் கலந்துகொண்ட சொற்பொழிவாளர்களுக்கு பல நிறுவனங்களின் சார்பில் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

கண்ணதாசன் பேச்சு

"தேர்தல் முடிந்த பிறகு, வெற்றி பெற்றவர்களைப் பாராட்டுவதற்கும், தேர்வியடைந்தவர்களுக்கு அனுதாபப்படவும் கூட்டங்கள் நடைபெறும் இந்தநேரத்தில், நாம் தோல்வியடைந்தாலும், உற்சாகத்தோடு கூடியிருக்கிறோம். நம்மில் பலர் பல இடங்களில் தோல்வியடைந்திருக்கிறார்கள்; அப்படித் தோல்வியடைந்தவர்களில் நானும் ஒருவன். தோல்வியடைந்தாலும் உற்சாகத்தோடுதான் கூடுகிறோம். நமக்கு இந்த உற்சாகமேற்படக் காரணம், நாம் ஆற்றவேண்டிய பணிகளை நம்மில் மற்றவர்கள் சட்டசபையில் ஆற்றுவார்கள் என்பதேயாகும். வெற்றிபெற வேண்டியவர்கள் வெற்றிபெறவில்லையே என்ற வருத்தம் நம்மிடையே எற்பட்டாலும், அதேநேரத்தில் நமக்காக உள்ள 15 பேர் அப்பணியை ஆற்றுவார்கள் என்ற உறுதியில் உற்சாகம் பெறுகிறோம்.

"திராவிட முன்னேற்றக் கழகம் சட்டசபைக்கு 15 பேர்களையும், பாராளுமன்றத்திற்கு 2 பேரையும்தான் பெற்றிருக்கிறது; மொத்தமே 17 பேர்கள்தான். தோல்வியடைந்தவர்கள் அதிகம்தான். ஆனாலும், சட்டசபைக்கு 15 பேர்கள்தானே வெற்றிபெற முடிந்தது என்று ஆயாசப்படாமல், 15 பேர்கள் வெற்றிபெற்று வந்திருக்கிறோமே என்ற உற்சாகம்தான் நம்மிடம் அதிகம்.

"ஒரு கட்சிக்குப் பலம் என்பது எண்ணிக்கையைப் பொறுத்ததல்ல; நமக்கு 15 பேர் எண்ணிக்கையைப் பொறுத்ததல்ல நமது கட்சியின் பலத்திற்கு! சட்டசபையின் உள்ளே சென்ற எத்தனைபேர் சனநாயகத்தைத் தாக்குபிடிக்கிறார்கள் என்பதுதான் கட்சியின் பலத்தைக் காட்டுவது.

"காமராசர் நம்மைப்பற்றிக் கூறினால், நாம் அதற்குப் பதில் சொல்லவேண்டும்—அவர் முதன் மந்திரி என்பதால்! பக்தவத்சலம் நம்மைப்பற்றி பேசுகிறார் என்றால், நாம் பதில் சொல்லுவோம்—அவர் ஓர் பரம்பரை மந்திரி என்பதால்! சுப்பிரமணியம் நம்மைப்பற்றி எதாவது சொல்லுகிறார் என்றால்—நாம் பதில் கூறலாம், சென்ற சட்டசபையில் எதிர்க்கட்சியை வாயடைக்கச் செய்ததாகச் சொல்லப்படுவதால்! பண்டித நேரு பேசினாலும் பதில் சொல்லுவோம்.

"மற்றவர்கள் நம்மைப்பற்றி பேசுகிறார்களென்றால், மக்கள் நமக்கு தனி மரியாதை செய்கிறார்கள் என்பதால் எற்பட்ட பொறாமையே காரணம்!

"இந்தியப் பேரரசு 'நயா பைசா' என்ற புதிய காசுகளைப் புகுத்தியிருக்கிறது; கிராம மக்கள் இதைப்பற்றி ஒன்றும் தெரிந்து கொள்ளமுடியவில்லை. அதுமட்டுமல்ல; ஒரு நாணயத்தில் 10 என்று போட்டிருக்கிறது. அதை கிராம மக்களிடம் சென்று 'இது 10 அணா நாணயம்' என்றாலும் அதை அந்த கிராம மக்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள். '10 காசு நாணயம்' என்றாலும் அதை ஏற்றுக் கொள்ளுவார்கள். அவர்களுக்கு அதில் தெரியக்கூடியது '10' என்ற எண் மட்டும்தான்; மற்றதெல்லாம் இந்தியிலிருக்கிறது!

"இந்தக் காசு வந்ததில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், ஒரு புதிய காசை 'நயா பைசா' என்று அழைக்க வேண்டுமாம்; ஒன்றுக்கு மேற்பட்டதை 'நயே பைசே' என்று அழைக்க வேண்டுமாம்! 'நயா' என்றால் புதிய அல்லது புது என்னும் பொருள்படுகிறது; இது ஒருமைச் சொல்! 'பைசா' என்றால் 'காசு' என்று பொருள்; இது பன்மையாக மாறும்போது 'நயே பைசே' என்று அழைக்கச் சொல்லுகிறார்கள். 'பைசா' என்பதை 'பைசே' என்றழைப்பதில் ஒருமை—பன்மை வித்தியாசத்தைக் காட்ட முடியும், 'நயா' என்பதை 'நயே' என்றால், 'புதிய அல்லது 'புது' வார்த்தை பன்மையாகி 'புதுக்கள்' என்று அழைக்கமுடியும்? 'புதுக்கள் காசுகள்' என்று பொருள் கொள்வது? நாம் புதுக் காசுகள் என்று பன்மையை (ஒன்றுக்கு மேற்பட்டதைக்) காட்டுகிறோம். ஒருமைக்கு 'புதுக்காசு' என்று சொல்லுகிறோம். காசு—காசுகள் என்றுதான் தமிழில் மாறுகிறதே தவிர 'புதுக்கள் காசுகள்' என்று மாறுவதைக் காணமுடியுமா? உலகத்தில் இதைவிட ஒரு மோசமான இலக்கணம்!கொண்ட லம்பாடி மொழியைக் காணமுடியாது. இந்த மொழியை அரியாசனம் எற்றிக் கொண்டு அதை எல்லாத் துறைகளிலும் புகுத்திக்கொண்டு, அவர்கள் முகத்தைக் காட்டுவதுபோல் காட்டுகிறார்கள்.

"இக்காசு வந்ததிலிருந்து கணக்கு ஒரே குழப்பம்; பொருள்கள் விலையை உயர்த்திக் கொண்டார்கள். கணக்குக்கே வராத காசாக இருக்கிறது; எங்கேயும் ஒரே குழப்பம் நிலவுகிறது."

எதிர்காலத்தில் தி. மு. கழகம் ஆற்ற இருக்கும் பணிகள் என்ன?

சுற்றுப்பயண நிகழ்ச்சிகளில் அண்ணா விளக்கம்

தமிழகத்தின் பல தொகுதிகளிலும் சுற்றுப்பயணம் செய்து வரும் அண்ணா அவர்கள், பொதுக்கூட்டங்களில், எதிர்காலத்தில் தி. மு. கழகம் ஆற்ற இருக்கும் பணிகளையும், மக்களின் ஒத்துழைப்பையும், அரசியல் நிலைகளையும் விளக்கியுள்ளார்.

தி. மு. கழகக் கிளைகள் ஏற்பாடு செய்த நிகழ்ச்சிகளுக்கு மட்டுமின்றி, பல மன்றங்கள், படிப்பகங்கள், பொது நிறுவனங்கள் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சிகளிலும் அவர் பங்கேற்று, நாட்டு மக்கள் நிலைமை பற்றி விளக்கம் தந்துள்ளார்.

இதுவரையில் அண்ணா அவர்கள் கலந்து கோண்டுள்ள சுற்றுப்பயண நிகழ்ச்சிகள் விவரம் இங்கு சுருக்கித் தரப்படுகிறது :—

சாத்தமங்கலம் :

18—4—57 மாலை 6 மணிக்கு, தென்னாற்காடு மாவட்டம், புவனகிரி வட்ட - சாத்தமங்கலத்தில், தி. மு. கழகத் தோழர்களாலும் பொதுமக்களாலும், அண்ணா அவர்களுக்கும், மற்றும் தோழர்கள் எம். செல்வராஜ், சி. நடராசன், எம். ஆனந்தன், எ. கோவிந்தசாமி ஆகியோருக்கு பாராட்டும்-வாழ்த்துரையும் வழங்கும் விழாவொன்று நடைபெற்றது.

தோழர் எ. கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்ற இப் பாராட்டு விழாவில், தேநீர் விருந்திற்குப் பின், தலைவர் முன்னுரையில், "தென்னாற்காடு மாவட்டத்தில் சுயநலம் கருதி உழைப்பாளர் கட்சியைக் குழி தோண்டிப் புதைத்துவிட்டு, காங்கிரசில் சேர்ந்து, மந்திரிப் பதவி ஒன்றே குறிக்கோள் என்று கருதியவர்கள், இன்று மந்திரிப் பதவியும் போய், தேர்தலில் வெற்றியா - தோல்வியா என்ற இறுதிக் கட்டத்தில் குறைந்த அளவு வாக்குகள் அதிகம் பெற்றே வெற்றிபெற முடிந்தது. இன்று மக்கள், உருட்டல் - மிரட்டலுக்கும் பணியாமல், பணங்கொடுத்து ஒட்டுக்களை விலைக்கு வாங்கும் சுயநலமிகளையும் நன்கு உணர்ந்துகொண்டு காங்கிரசை எதிர்த்து வாக்குகள் அளித்திருக்கிறார்கள். நாங்கள் தி. மு. கழகச் சார்பில் 15 பேர்கள் சட்டசபைக்குச் செல்கின்றோம்; மக்கள் நலம் கருதி காங்கிரசிற்கு எதிர்ப்பாளராகயிருந்து, ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டு பணியாற்றுவோம்," என்று உறுதி கூறினர்.

அதன் பிறகு தோழர்கள் எம். செல்வராஜ், சி. நடராசன், எம். ஆனந்தன் ஆகியோர் பாராட்டும்-வாழ்த்தும் வழங்கிய அனைவருக்கும் நன்றி கூறிக்கொண்டார்கள்.

அடுத்து, தோழர் அ. பொன்னம்பலனர் கழகக் கொள்கையை விளக்கிப் பேசினர்.

இறுதியாக அண்ணா அவர்கள், பாராட்டு விழா நடத்தியவர்கட்கும், மலர் மாலைகள் - கைத்தறித் துண்டுகள் வழங்கிய பல தோழர்கட்கும் நன்றி கூறிவிட்டுப் பேசியதாவது :—

"ஜனநாயகத்தைக் காப்பாற்றவும், மக்கள் குரலை மதித்து ஆட்சியாளர் நடக்கும்படி செய்யவும், நல்ல ஒரு எதிர்க் கட்சியாக சட்டசபையில் நாங்கள் பணியாற்றுவோம்; மக்களின் நலம்—முன்னேற்றங் கருதி உழைப்போம்" என்றார்.

தலைவர் முடிவுரைக்குப் பின், தோழர் இராச-சொக்கலிங்கம் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

விருத்தாசலம் :

18—4—57 இரவு 7 மணிக்கு, இவ்வூர் தி. மு. கழகச் சார்பில், விருத்தாசலம் ஆற்றுமணலில் தோழர் உளுந்தூர்பேட்டை சு. சண்முகம் தலைமையில் பாராட்டுப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தலைவர் முன்னுரைக்குப் பின், அண்ணா அவர்களுக்கும், மற்றும் தோழர்கள் அனைவருக்கும் மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவித்தும், பாராட்டு—வாழ்த்திதழ்களும் வாசித்தளிக்கப்பட்டன. தோழர்கள் எம். செல்வராஜ், சி. நடராசன், எ. கோவிந்தசாமி, எம். ஆனந்தன் ஆகியோர் பாராட்டுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, மக்கள் நலம்—முன்னேற்றம் கருதி சட்டமன்றத்தில் பணியாற்றுவோம் என்று உறுதி கூறினர்கள்.

தோழர் அ. பொன்னம்பலனர் தேர்தலில் வெற்றி தோல்விகளைப் பற்றி விளக்கிக் கூறினர்.

இறுதியாக அண்ணா அவர்கள் தி. மு. கழகத்திற்கு வாக்களித்த மக்களைப் பாராட்டியும், தி. மு. கழக இலட்சியங்களை விளக்கியும் விரிவுரையாற்றினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

விருந்து

18—4—57 பிற்பகல் 1 மணியளவில் விருத்தாசலம் தோழர் எம். செல்வராஜ் அவர்கள், அண்ணா அவர்களுக்கும், மற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் விருந்து ஒன்று அளித்தார்.

உளுந்தூர்பேட்டை :

19—4—57 மாலை 4 மணிக்கு, உளுந்தூர்பேட்டையில் அண்ணா அவர்கள், தி. மு. கழகம் இடமாற்றம் செய்யப்பட்டிருந்த இடத்தில் தி. மு. கழகக் கொடியை உயர்த்தினர். திரு. எஸ். சண்முகம் அவர்கள் அண்ணா அவர்களுக்கு மலர் மாலை சூட்டினர்.

ஆத்தூர் :

மாலை 6-30 மணிக்கு, அண்ணா அவர்கள் தம் குழுவினருடன் ஆத்தூர் வந்து சேர்ந்தார். தோழர் எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் மலர் மாலைகள் சூட்டியும், கைத்தறி ஆடைகள் வழங்கியும் வரவேற்றார்கள். தேநீர் விருந்து தி. மு. கழகத் தோழர்களால் வழங்கப்பெற்றது.

நரசிங்கபுரம் :

இரவு 7-30 மணிக்கு, எம். பி. சுப்பிரமணியம் தலைமையில், இவ்வூர் தி. மு. கழகத் தோழர்கள், கே. வி. கே. சாமி படிப்பகத்தைத் திறந்துவைக்கும்படி அண்ணா அவர்களைக் கேட்டுக்கொண்டனர். தலைவர் முன்னுரை கூறியதும் அண்ணா அவர்கள் படிப்பகத்தைத் திறந்துவைத்து, இளைஞர்களின் ஊக்கத்தையும் உழைப்பையும் பாராட்டி இப்படிப்பகம் அறிவு வளர்ச்சிக்குத் துணை புரியும் என்றும், இதைப் பொது மக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்றும் குறிப்பிட்டுப் பாராட்டுக்கு நன்றி கூறினர்.

தோழர் என். வி. நடராசன் அவர்கள் தி. மு. கழக கொடியை உயர்த்தி வைத்துப் பேசினர்.

தோழர் இருசப்பன் அவர்கள் மக்கள் அளித்த வெற்றிக்குப் பாராட்டும் நன்றியும் கூறினர்.

கீரிப்பட்டி :

இரவு 8 மணிக்கு இவ்வூர் தி. மு. கழகத் தோழர்கள் ஏற்பாடு செய்திருந்த பாராட்டுக் கூட்டத்திற்கு தோழர் பொன்னுச்சாமி தலைமை வகித்தார். தி. மு. கழகச் சார்பில் வெற்றி பெற்ற தோழர்கட்குப் பாராட்டுதல் கூறி, மலர்மாலைகள் சூட்டினர்கள். தோழர்கள் எம். பி. சுப்பிரமணியம், இருசப்பன், என். வி. நடராசன் அ. பொன்னம்பலனர், அண்ணா ஆகியவர்கள் தேர்தலில் நாம் பெற்ற வெற்றி - தோல்வி குறித்தும், தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கியும் விரிவுரையாற்றினர்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றிகூற கூட்டம் முடிந்தது.

தம்மம்பட்டி :

இரவு 9 மணிக்கு இவ்வூர் தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற பாராட்டுப் பொதுக் கூட்டம் தோழர் எஸ். கே. அப்துல்சுக்கூர் தலைமையில் நடைபெற்றது. பல்லாயிரக் கணக்கில் மக்கள் திரண்டு வந்திருந்தார்கள்.

தலைவர் முன்னுரைக்குப் பிறகு தோழர்கள் ஜி. பி. சோமசுந்தரம், எம். பி. சுப்பிரமணியம், ஆனைமுத்து, எ. சித்தையன், என். வி. நடராசன், அ. பொன்னம்பலனர், அண்ணா ஆகியவர்கள் தி. மு. கழகக் கொள்கைகளை

(4-ம் பக்கம் பார்க்க)

அண்ணா தலைமையில் 'அட்வகேட் அமரன்'

சென்னை, எப். 22—

சென்னை-அண்ணாமலை மன்றத்தில் கலா நிகேதன் ஆதரவில் எம். ஜி. ஆர். நாடகக் குழுவினரின் 'அட்வகேட் அமரன்' நாடகம் 21—4—57 மாலை 7 மணிக்கு நடைபெற்றது.

நாடகத்திற்கு அண்ணா அவர்கள் தலைமைவகித்துப்பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"பெரும்பாலான மக்கள் கல்வியறிவில்லாதவர்களாக உள்ள நாட்டில் கலையின்மூலம் சுலபமாகச் சீர்திருத்தம் செய்யமுடியும். சிந்தனையைத் தூண்டும் நல்ல கதைகளைத் தேர்ந்தெடுத்தும், பாமரமக்களின் பல்வேறு பிரச்சினைகளை அலசி ஆராய்ந்தும் நாடகங்களாக நடத்தினல் சமூக அமைப்பை மாற்றி முன்னேறச் செய்ய முடியும்"

இறுதியில் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், அண்ணாவின் பாராட்டுரைக்கும் நல்லுரைக்கும் நன்றிகூறி, பாமர மக்களின் நன்மைக்காக தனது மன்றத்தின் மூலம் பாடுபடுவதாக உறுதியளித்தார்.

மாநில உணர்வு, மொழிப்பித்து ஆக்கத்தைத் தடுத்து நிறுத்துமாம்!

பிரிவினையின் பின்விளைவுகளை அகற்றிப் பொருளாதார வளத்தைக் கூட்டுமாம்

மத்திய அரசும்—மாநில ஆட்சிகளும் ஒத்துழைக்கத் துணை நிற்குமாம்

மாநிலங்களுக்கிடை அரசியல் சமநிலை உருவாவதற்கு உதவுமாம்

மண்டலக் குழுவின் பணி குறித்து பண்டித பந்தின் விளக்கம்

புதுடில்லி, ஏப். 23—

"தேசத்தின் உணர்வுபூர்வமான ஒருமைப்பாட்டை உருவாக்குவதே மண்டலக்குழு அமைப்பின் குறிக்கோளாகும். அதுவுமன்றி, மாநில உணர்வு, பகுதிப்பற்று, மொழிப்பித்து, தனிமுனைப்பு முதலியவற்றின் ஆக்கத்தைத் தடுத்து நிறுத்தவும், சில விவகாரங்களில் பிரிவினையின் பின்விளைவுகளை அகற்றி, மாநில சிரமைப்பின் வழியைச் செம்மைப்படுத்தி, பொருளாதார வளத்தைக் கூட்டவும் மேற்படி குழு உதவிபுரியும். மத்திய அரசும் மாநில ஆட்சிகளும் ஒன்றோடு ஒன்று ஒத்துழைக்கவும், தம்தம் அனுபவங்களையும் கருத்துக்களையும் பரிமாறிக்கொள்ளவும் துணை நிற்கும். பெரும் பெரும் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான ஒத்துழைப்பை நல்கும். தேசத்திலுள்ள வெவ்வேறு மண்டலங்களுக்கிடை, ஒருவிதமான அரசியல் சமநிலை கருக்கொள்வதற்கும் மேற்படி மண்டலக்குழு அமைப்பு பயன்படும்."

மண்டலக்குழு அமைப்பின் விளைவாக ஏற்படும் பயன் குறித்து, மேற்கண்டவாறு இந்தியப் பேரரசின் உள்நாட்டமைச்சர் பண்டித பந்த் விளக்கம் தந்துள்ளார்.

வடமண்டலக் குழுவின் முதல் கூட்டத்தைத் துவக்கிவைத்த பண்டித பந்த், மண்டலக் குழுவின் பிறப்பிற்கான காரணங்களையும், எதிர் பார்க்கப்படுகின்ற விளைவுகளையும், மண்டலக் குழுவில் இடம் பெறும் மாநில ஆட்சிகள் செயல்படவேண்டிய முறைகளையும், விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பிட்ட மண்டலக் குழுவில் இடம் பெறும் மாநில ஆட்சியினர் ஒவ்வொருவரும் கலந்து பேசுவதில் மேற்கொள்ளும் மனப்போக்கையும், ஒருவர் மற்றொருவர் கருத்தில் பொதிந்துள்ள உண்மையைத் தெரிந்து வியக்கும் ஆற்றலையும், குறிப்பிட்ட மாநிலத்தின் பிரச்சினைகளை மொத்த மாநிலங்களின் பிரச்சினைகளுக்கு இணங்கச் செய்வதில் தாங்கள் ஒவ்வொருவரும் தயாராக இருப்பதையும் பொறுத்துத்தான், மண்டலக் குழுவின் வெற்றியும் தோல்வியும் இருக்கிறது என்றும் பண்டித பந்த் கருத்தறிவித்துள்ளார்.

"மண்டலக் குழு அமைப்பு குறித்து பொதுவாக மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டிருந்தபோதிலும், சிலர் அச்சமும் அறிவித்தனர். இந்தத் திட்டம் துணிகரமான ஏற்பாடு என்றும், குறிப்பிட்ட மண்டலக் குழுவில் பங்கு கொள்ளக்கூடிய மாநிலங்கள் அனைத்தும் தங்களுக்குள்ளாக ஆற்றலமிருந்த ஒன்றாக அமைய முன் வருவதுடன் மத்திய ஆட்சியையும் பலந்தாழ்வடையச் செய்துவிடவும் கூடும் என்றும் அச்சம் கொண்டனர்.

"இந்த மண்டலக் குழு திட்டம் ஒன்றும் புதிதல்ல; அமெரிக்காவில் 1934-ம் ஆண்டு முதல் பல்வேறு மாநில ஆட்சிகளுக்கிடையேகூட, அவ்வாட்சிகளுக்குப் பொதுவாக உள்ள எண்ணெய், எரிகாற்று, நீர்காப்பு, பூங்கா, அட்லாண்டிக் கடலில் மீன் பிடித்தல் போன்ற விவகாரங்களில் கலந்துபேசவும் நடவடிக்கை எடுக்கவுமான ஏற்பாட்டை மேற்கொண்டுள்ளன; 1908-ம் ஆண்டில் கூட்டப்பட்டதும் பின்னர் தேசிய சம்பவமாகக் கொள்ளப்பட்டதுமான கவர்னர் குழு கூட்டமும் இக்கருத்தைக் கொண்டு எழுந்ததுதான். ஆஸ்திரேலியாவிலும் மாநிலங்களுக்கிடை ஒத்துழைப்பைப் பெற, பல்வேறு உருவில் அமைப்புகள் உள்ளன"

என்றும், பண்டித பந்த் தனது திறப்பு விழாவில் குறிப்பிட்டார்.

மண்டலக் குழு அமைப்பு எண்ணம் இந்தியாவில் எப்படி உருவெடுத்தது என்பது பற்றி பந்த் பின்வருமாறு குறிப்பிட்டார் :—

"இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன் 1944-ல் பேராசிரியர் கூப்லாந்து உருவாக்கிய அரசியல் ஏற்பாடுகள் பலவற்றிற்கும் பொருளாதார உயிர் கொடுக்க மேற்படி மண்டலக் குழு அமைப்பு வற்புறுத்தப்பட்டது. அத்திட்டம், அதிகாரத்தில் குறைந்த மத்திய ஆட்சியையும், மத்திய ஆட்சிக்கும் மாநில ஆட்சிக்கும் இடையில் மண்டலக் கூட்டாட்சிகளையும் நிறுவும் நோக்குடன் தீட்டப்பட்டதாகும்."

வட மண்டலக் குழு முதல் ஆக்க வேலை

தொழில் நுட்ப நிபுணர்களை பரிமாறிக் கொள்ளத் திட்டம்

புதுடில்லி, ஏப். 24—

வடக்கு மண்டலக் குழுவின் முதல் கூட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இராஜஸ்தான், பஞ்சாப், காஷ்மீர், டில்லி, இமாசலப் பகுதி ஆகிய மாநிலங்களின் பிரதிநிதிகள் அதில் இருப்பர்.

அம்மண்டலக் குழுவிலுள்ள மாநிலங்களுக்கிடையே தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்கள், அதிகாரிகள் ஆகியோரைப் பரிமாறிக் கொள்ளவும், தொழில் பயிற்சி நிறுவனங்களை ஏற்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

வடக்கு மண்டலத்திற்கு மட்டுமின்றி சாத்தியமானால் இந்தியா முழுமைக்குமே பொதுவான ஆயுதப் போலீஸ் படையை ஏற்படுத்துமாறு இந்தக் குழு சிபாரிசு செய்யக்கூடுமாம்.

கிழக்கு மண்டலக் குழுவின் முதல் கூட்டம் ஏப். 30-ல் கல்கத்தாவில் நடைபெறும்; இதில் பீகார், அசாம், மேற்கு வங்கம், ஒரிசா, மணிப்பூர், திரிபுரா ஆகிய மாநிலங்கள் அடங்கியிருக்கும்.

உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்களைக் கொண்ட மத்திய மண்டலக் குழுக் கூட்டம் இலட்சுமணபுரியில் மே. 1-ந் தேதி நடைபெறும்.

எல்லாக் கூட்டங்களுக்கும் இந்திய உள்நாட்டமைச்சர் பண்டித பந்த் தலைமை தாங்குவார்.

அக்கிரமங்களை ஒடுக்க போராட்டமாம்!

லோகியா தரும் தகவல்

இலட்சுமணபுரி, ஏப். 22—

மே மாதம் 10-ந் தேதி முதல் உத்திரப்பிரதேச மாநிலத்தில் 'சட்ட மறுப்பு இயக்கம்' நடத்தப்படும் என்று சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் டாக்டர் லோகியா, கூட்டமொன்றில் அறிவித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து பம்பாய், ஆந்திரம், ஒரிசா, பீகார் ஆகிய மாநிலங்களிலும் இயக்கத்தை நடத்தக்கூடுமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலஞ்சம் — ஊழல்—சிபாரிசு ஆகியவை தற்போதைய நிர்வாகத்தில் வேரூன்றிவிடுவதற்கு முன் இம்மாதிரிசெய்யவேண்டியது அவசியமாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இன்னும் 4 அல்லது 5 ஆண்டுகளுக்குள் 5 இலட்சம் போராட்ட வீரர்கள் இந்த இயக்கத்தில் பங்கு கொண்டால் ஆட்சியாளரின் அக்கிரமங்களை ஒடுக்கிவிடலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சட்டம் இயற்றினால் மட்டும் போதுமா?

நிலச் சீர்திருத்தம் பற்றி கேரள அமைச்சர்

திருவனந்தபுரம், ஏப். 22—

"தனிப்பட்டவர்கள் வசம் உள்ள நிலத்தைக் கைப்பற்ற சட்டம் இயற்றுவது மட்டும் போதாது; அரசாங்கத்தின் வசம் உள்ள நிலங்களைப் பற்றியும் ஆராயவேண்டும்.

"மாநிலத்தில் நிலமில்லாதவர்களின் தொகை மிகவும் அதிகமாக உள்ளது. விநியோகிப்பதற்காக உள்ள நிலம் குறைவாக உள்ளது. சரியான புள்ளி விவரங்கள் இல்லாதது பெரிய குறையாகும். இதனால் நில விநியோகத்தில் செயல்பட முடியவில்லை. தற்போது துப்புரவு செய்யப்படும் காட்டுப்பகுதி நிலங்களின் புள்ளி விவரங்கள் கிடைத்ததும் நிலப் பதிவு செய்யவும், குடும்பத்தின் பொருளாதார அடிப்படையில் நிலம் வழங்கவும் வழி பிறக்கும்"

என்று, கேரள ரெவின்யூ அமைச்சர் கௌரி அம்மையார் மாவட்ட கலெக்டர்கள் மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

தெரிந்து கொள்ளுங்கள்!

ஐதராபாத் நிசாமுக்குத் தரவேண்டிய ரூ. 25 இலட்சம் நஷ்டஈடு தொகையை ஆந்திரம்-பம்பாய்-மைசூர் ஆகிய மூன்று மாநில சர்க்கார்களும் தரவேண்டுமென்று ஆந்திர முதலமைச்சர் கூறியுள்ளாராம்.

எதிர்காலப் பணி: அண்ணா விளக்கம்

கழகக் கூட்டம்

★

திருக்கோடிக்காவல் :
ஐயனார் கோயில் அருகில்
26-4-57 மாலை 5-30 மணிக்கு
தி. மு. கழகத் துவக்கவிழா
தலைவர் : கோ. சி. மணி
கோடியேற்றுபவர் :
பொ. தருமன்
பேசுவோர் :
என். வி. நடராசன்
கோ. நாராயணசாமி

தோழர்கள் சுந்தரேசன், பி. டி. இராசன் குழுவினரின் இன்னிசை நடைபெறும்.

சேலம் மாவட்ட தி. மு. கழகக் கூட்டம்

"29—4—57 காலை 10-30 மணிக்கு சேலத்திலுள்ள மாவட்ட அலுவலகத்தில் மேற்படிக் கூட்டம் நடைபெறும்.

ஆய்வுக்குவருபவை:-1. மாவட்டத்தின் பொதுத்தேர்தல் முடிவுகள்; 2. புதிய கிளைக் கழகங்கள் துவக்குவது; 3. பல்வேறு தொழிற் சங்கங்கள் துவக்குவது; 4. மாவட்டச் செயலாளரால் கொண்டுவரும் இதர பிரச்சினைகள்.

எல்லா மாவட்டப் பிரதிநிதிகளும் வருகைதர வேண்டுகிறேன்"

என்று, சேலம் மாவட்ட துணைச் செயலாளர் தோழர் ப. இராமலிங்கம் அறிவிக்கிறார்.

சித்தூர் மாவட்ட தி. மு. கழகக் கூட்டம்

"28—4—57 அன்று சித்தூர் மாவட்ட தி. மு. கழகக் கூட்டம் நடைபெறும்; அதுபோது மாவட்டக் குழு உறுப்பினர் தேர்தல் நடைபெறும்"

என்று, சித்தூர் மாவட்டச் செயலாளர் கே. பார்த்தசாரதி அறிவிக்கிறார்.

சென்னை—முன்னணிக் கழகம்

25—4—57 மாலை 5-30 மணிக்கு சென்னை—திருவல்லிக்கேணி, சுப்பராய செட்டி தெரு எண் 9 கட்டிடத்தில், திரு ஆர். சண்முகம் தலைமையில், திரு.எஸ். துரைராஜ் 'ஆட்சி சொற்கள்' பற்றி சொற்பொழிவாற்றுவார்.

உற்பத்தியைப்பெருக்க வழிகாணுகின்றனர்!

தனியார் துறையில் நைத் தொழில்களுக்குக் கடனும்

பம்பாய், ஏப். 23—

தனியார் துறையில் நடத்தப்படும் நடுத்தர கைத்தொழில்களுக்குக் கடன் வசதியளிப்பதற்கு ஒரு நிறுவனத்தை ஏற்படுத்த இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம்.

இந்த நிறுவனம் ரூ. 12½ கோடி முதலீட்டுடன் செயல்படுமாம்.

இதன் முக்கிய நோக்கம் உற்பத்தியைப் பெருக்குவதேயாகும் என்று கூறப்படுகிறது.

கடன்கள் 3 ஆண்டுகள் முதல் 7 ஆண்டுகளுக்குத் தரப்படுமாம்.

ஒரு குறிப்பிட்ட நிறுவனத்திற்கு ரூ. 50 இலட்சத்திற்கு மேல் அதிகமாகக் கடன் தரப்படமாட்டாதாம்.

கோயில்பட்டி, ஏப். 24—

இங்கு நடைபெறும் கிராமாதிகாரிகளின் அணிவகுப்புக்கு வந்துள்ள கிராமாதிகாரிகள் கருப்புச் சின்னங்கள் அணிந்துள்ளனர். தங்களுடைய குறைகளை அரசாங்கத்திற்கு எடுத்துக் காட்டவே இந்த நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

விளக்கிக் கூறி, மக்கள் உரிமைகளைக் காத்திட-நாட்டு விடுதலைக்குப் பணியாற்றி வரும் தி. மு. கழகம் சட்டசபையிலும், ஜனநாயக அடிப்படையில் பணியாற்றி வரும் என்றும் விரிவுரையாற்றினார்கள். மலர்மாலைகளும், கைத்தறித் துண்டுகளும் அணிவிக்கப்பட்டன. தலைவர் முடிவுரை கூறியதும் தோழர் லத்தீப் நன்றி கூற கூட்டம் முடிவடைந்தது.

ஆரணி (வ. ஆ.):

ஆரணி முதற் பிரிவு ஆரம்ப ஆசிரியர் சங்க ஆண்டு விழா 20—4—57 இரவு நடைபெற்ற நிகழ்ச்சிகளில் அண்ணா அவர்களும் கலந்துகொண்டார்கள்.

அண்ணா அவர்கட்கு வாழ்த்தும், வரவேற்பு ம[illegible]லும் வாசித்தளித்து, மலர்மாலைகள் சூட்டினர்.

அண்ணா அவர்கள் ஆரம்ப ஆசிரியர்கள் நிலைமைகளை விளக்கியும், அவர்கள் வாழ்க்கைத் தேவைகட்கு அரசியலார் கொடுக்கும் சம்பளம் போதவில்லை என்றும், விலைவாசிகள் ஏற்றத்தால் வாழ்க்கையை இனிது நடத்த முடியவில்லை என்றும் குறிப்பிட்டார்.

அதிக இலாபம் கிடைக்கும் தொழில்கள் மூலம் தனிப்பட்டவர்கள் கொள்ளை இலாபம் அடித்துக்கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டி, சர்க்காரே இத்தொழில் துறைகளைக் கைப்பற்றி அதிக இலாபம் கிடைக்கும்படியான ஏற்பாடுகளைச் செய்யலாமென்றும், அந்த இலாபத்திலிருந்து, ஆரம்ப ஆசிரியர்களுக்குப் பேருதவி அளிக்க முடியுமென்றும், சட்டசபையில் ஆரம்ப ஆசிரியர்கள் நலம் கருதி பணியாற்றுவோம் என்றும் கூறினர்.

பாராட்டுக் கூட்டம்

இரவு 7-30 மணிக்கு இவ்வூர் தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற பாராட்டுப் பொதுக்கூட்டத்தில், கழகச் செயலாளர் தோழர் தி. எத்திராஜ் தலைமையில், வெற்றி பெற்ற தோழர்கட்கு வாழ்த்து மடல்களும், மலர் மாலைகளும், கைத்தறி துண்டுகளும் வழங்கப்பட்டன.

தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர்கள் கருத்தோவியன், போளூர்-சுப்பிரமணியம், இரா. தருமலிங்கம், சந்தானம், எம். பி. சாரதி, களம்பூர்-அண்ணாமலை, ப. உ. சண்முகம், அ. பொன்னம்பலனார், சி. வி. இராசகோபால், அண்ணா ஆகியவர்கள் சனநாயகம் வளர—அரசியல் அறிவு தெளிவுடன் 17 இலட்சம் மக்கள் தி. மு. கழகத்திற்கு வாக்களித்திருப்பதைப் பாராட்டியும், நன்றி தெரிவித்துக் கொண்டதுடன், தி. மு. கழகம் எதிர்கால ஆக்கவேலைகளில் ஈடுபட்டு வெளியில் மக்கள் சக்தி ஒன்றுபட்டு பக்குவமாக அமைந்திருந்தால், சட்டசபையில் 15 பேர்களாக நாமிருந்தாலும், நம் குரலை மாற்றுக் கட்சிக்காரர்கள் மதித்து நடப்பார்கள்என்றும் விரிவுரை ஆற்றினர்.

தலைவர் முடிவுரைக்குப் பிறகு தோழர் சுந்தரம் நன்றி கூற கூட்டம் முடிந்தது.

சொற்பயிற்சிக் கூட்டம்

25—4—57 இரவு சென்னை—47-வதுவட்ட கழகப் பணிமனையில், தோழர் எம். எஸ். மணி தலைமையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும்; அதுபோது 'ஒற்றுமை' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.